# 2-ம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் 2025-ம் ஆண்டுக்குள் நிறைவு பெறும்



சென்னை, ஏப்.30-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் வரும் 2025-ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு அதிகாலை 5 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையில் மெட்ரோ ரயில் சேவையை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிவடைந்து இரு வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து, வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் விரிவாக்கப் பணி நடைபெறுகிறது.

இதற்கிடையில், இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. மாதவரம்-சிறுசேரி, மாதவரம்-சோழிங்கநல்லூர் உள்பட 3 வழித் தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் மொத்தம் 119 கி.மீ. தொலைவுக்கு ரூ.85 ஆயிரத்து 047 கோடி மதிப்பில் திட்டப்பணிகள் நடைபெறவுள்ளன. இதற்கான திட்ட அறிக்கை 638 பக்கங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்ட அறிக்கை மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில், மக்கள்தொகை, வழித்தடங்கள் விவரம், ரயில் நிலையங்கள், எங்கெல்லாம் சுரங்கங்கள், உயர்மட்டப் பாதைகள் அமைக்க வேண்டும் என்பது தொடர்பான வரை படங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன. இரண்டாவது கட்ட திட்டப் பணிகள் 2025-ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து அதிகாலை 5 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையில் மெட்ரோ ரயில் சேவையை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்று மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.